பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 06 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரண்டாம் கட்டமாக நடைபெறும் விழாவில் 65 பேருக்கு பத்ம விருதுகளை இன்று வழங்குகிறார்.

2. வேகமாக வளர்ந்து வரும் நம்பகமான பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக பல்வேறு சீர்திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

4. இருதரப்பு உறவுகள் குறித்து சீன வெளியுறவு அமைச்சர் திரு. வாங் யீ-யுடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல் பேச்சு நடத்தியுள்ளார்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரண்டாம் கட்டமாக நடைபெறும் விழாவில் 65 பேருக்கு பத்ம விருதுகளை இன்று வழங்குகிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று மாலை இதற்கான நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் 2 பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளையும், 7 பேருக்கு பத்மபூஷன் விருதுகளையும், 56 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளையும் குடியரசுத்தலைவர் வழங்க உள்ளார்.

நடிகர் மம்முட்டி, கிரிக்கெட் வீரர் ரோஹித் ஷர்மா, டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் உள்ளிட்டோருக்கு இன்று பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன.

இதில் கடந்த மாதம் 25ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் முதற்கட்டமாக 66 பேருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டன.

<<<<>>>>

வேகமாக வளர்ந்து வரும் நம்பகமான பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடக நிறுவனத்தின் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் பேசிய அவர், 140 கோடி மக்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

வளர்ச்சியை நோக்கியே அரசின் கொள்கைகளும், செயல் திட்டங்களும் அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியினர் மேம்பாட்டுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த பல ஆண்டுகளாக நீடித்து வந்த மாவோயிஸ்ட் வன்முறைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நக்சல் பாதித்த பகுதிகளில் முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதிகளில் 12 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைக் கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 9 ஆயிரத்து 500 கைப்பேசி கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருவதாகவம் அவர் கூறினார்.

நாட்டில் மெட்ரோ ரயில் சேவைகள் நகர்ப்புற போக்குவரத்தை எளிதாக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வந்தே பாரத், நமோ பாரத் மற்றும் அம்ரித் பாரத் ரயில்கள் நாட்டின் ரயில் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

உயர்தரமான சுகாதார சேவைகள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சவாலான சூழலுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இளையோர், தொழில்துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தேசத்தின் முன்னேற்றத்தில் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேசிய வேளாண் கூட்டுறவு சந்தை கூட்டமைப்பின் சார்பில், ஏல நடைமுறைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள **Nafex** என்ற

இணையதளத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியின்போது விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் கூட்டுறவுத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக பல்வேறு சீர்திருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற சுற்றுலா தொழில்துறையினர் உடனான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

போட்டித்தன்மை வாய்ந்த சுற்றுலா சூழலை உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

எளிமையான அனுமதி நடைமுறைகளின் மூலம் முதலீடுகளை எளிதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளுடன் மத்திய அரசு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

இருதரப்பு உறவுகள் குறித்து சீன வெளியுறவு அமைச்சர் திரு. வாங் யீ-யுடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்திற்கு இடையே இந்த சந்திப்பு நடைபெற்றதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எல்லைப் பகுதியில் சூழல் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து சீன அமைச்சருடன் திரு. அஜித் தோவல் ஆலோசனை மேற்கொண்டார்.

எத்தியோப்பியா, ஈரான், பிரேசில் ஆகிய நாடுகளின் உயர் அதிகாரிகளுடனும் திரு. அஜித் தோவல் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

விவசாயிகள், நுகர்வோர் ஆகிய இருதரப்பினரின் நலன்களையும் கருத்தில் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

வெங்காய இருப்பு தொடர்பாக புதுதில்லியில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் போதுமான இருப்பை உறுதி செய்தல், நுகர்வோர் நலன்களை பாதுகாத்தல் ஆகியவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் விரிவான திட்டமிடல் மூலம் விவசாயிகள் நலன் பாதுகாக்கப்படுவதுடன், விலை நிலைத்தன்மையும் உறுதி செய்யப்படும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

கத்தாரில் ஞாயிற்றுக்கிழமை இரவு எரிவாயு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 இந்தியர்கள் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த துயர சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இந்தியர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகள் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள இந்திய தூதரகம் கத்தார் அரசு அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அரசு நிர்வாகத்தில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு மக்கள் சேவைகளை எளிமையாக்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பணியாளர் நலத்துறை சார்பில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், டிஜிட்டல் நடைமுறைகள் வெளிப்படைத்தன்மையை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் மத்திய தொழிலக பாதுகாப்பு படை முக்கியப் பங்கு வகிப்பதாக உள்துறை இணையமைச்சர் திரு. **Bandi Sanjay Kumar** கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்தப் படையின் புதிய தலைமையகத்திற்கான கட்டுமானப் பணிகளை நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தப் படை வீரர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வசதி இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் திரு. **Bandi Sanjay Kumar** தெரிவித்தார்.

<<<<>>>>

ஆதார் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளவர்களின் எண்ணிக்கை **3** கோடியை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த செயலியை, குறுகிய காலத்திற்குள் **3** கோடியே **10** லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்துள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த செயலி வாயிலாக **40** லட்சம் பேர் தங்களது கைபேசி எண்ணின் மாற்றத்தை பதிவு செய்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த செயலி வாயிலாக முகவரி மாற்றங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியா - மொராக்கோ இடையிலான தீவிரவாத தடுப்பு கூட்டு செயல்திட்டக் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் திரு. வினோத் பாடே, மொராக்கோ தேசிய காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஹிச்சம் பாலி ஆகியோர் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தனர்.

தீவிரவாத ஒழிப்பில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளவும் இக்கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளார்.

<<<<>>>>

லக்னோவில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே இந்த விபத்து தொடர்பாக 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 4 பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத்தின் உத்தரவின் அடிப்படையில் மின்வாரியம், லக்னோ மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றைச் சேர்ந்த 4 அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியாவின் லக்ஷயா சென், தன்வீ ஷர்மா, ஸ்ரீகாந்த் உள்ளிட்ட முன்ன வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

---------------

விமானப்படை சார்பில் நடைபெறும் அர்ஜன் சிங் நினைவு ஹாக்கிப் போட்டி பெங்களூருவில் இன்று தொடங்குகிறது.

**<<<<The End>>>>**